# புதிய பாதை

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வ ஏடு | தமிழகத்தில் 1-00

காதம் 4 | மாசி 1986 | அன்பளிப்பு 2-00 | சுவடு 2


# ஆறு ஆண்டுகளின் பின் அவசரத் திருப்புமுனை

இலங்கையின் இன்றைய முதுபெரும் அரசியல்வாதிகளில் ஒருவரும், அரசியலில் தனக்கு எதிரானபலமானசக்திகளையெல்லாம் பகடைக்காய்கள் போல் ஆட்டிவைக்கும் ஜெயவர்த்தனா, இவ்வருட ஆரம்பத்தில் எல்லோருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய முறையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு குடியுரிமை வழங்கிதனது ஆட்டத்தை தொடக்கிவைத்தார்.

1977ம் ஆண்டு 5/6 அதிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று, அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜெயவர்த்தனா, தனது அரசின் பொருளாதாரத் திட்டத்தை தரகு முதலாளித்துவ பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் அறிமுகப்படுத்தினார். இந்நடவடிக்கையானது நாட்டு நலன்களையும், வளங்களையும், மனித உழைப்பையும் முதலாளிகளுக்கும், பல்தேசிய கம்பனிகளுக்கும் விற்கும் நடவடிக்கையாக இருந்தமையால் அன்றைய எதிர்த்தரப்பில் இருந்தவர்களில் குரல்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அரசிற்கெதிராக பலமாக ஒலிக்கத் தொடங்கியது. அவற்றில் சிறிமாவோவின் குரல் மிகவும் உச்சாக; பொருளாதார ரீதியாக நாம் நாட்டை பல்தேசியக் கம்பனிகளின் ஆளுமைக்கு உட்படுத்த அனுமதிக்கமுடியாது. பொருளாதார ரீதியாக நாம் செயலிழந்தவர்களாயின் அரசியல் ரீதியாகவும் செயலிழந்தவர்களாவோம் எனக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததுடன், மீண்டும் தான் அதிகாரத்துக்கு வரும்போது இக் கம்பனிகள் யாவும் தேசியமயமாக்கப்படும் எனவும் பயமுறுத்தினார். இதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிடத் தயங்கினார்கள்.

இப் பன்நாட்டு முதலாளிகளுக்கு நம்பிக்கையூட்டுவதற்காகவும் அன்று சிறையில் இருந்த ஜே. வி. பி.யினர் எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் வாழ்க்கைச் செலவு ஏற்றம், வேலைவாய்பின்மை போன்றவற்றால் அரசிற்கெதிராக கிளர்ந்தெழும் தொழிலாளர்களை அணிதிரட்டி தனது ஆட்சியைக்கவிழ்க்கப்பயன்படுத்திவிடுவார்கள் என்பதை உணர்ந்ததாலும், மறுபக்கத்தில் சிறிமாவோவின் ஆட்சிக்காலத்தில் தனது ஆதரவாளர்கள் வெளிநாட்டுச் செலாவணியில் சிக்கி இருந்தாலும். இவ்விருவகைக் குற்றவாளிகளுக்கும் குற்ற விசாரணை நீதிக் கமிசனின் 1ம் பிரிவு 2ம் பிரிவு போன்றவற்றிலேயே விசாரணைக் குடபடுத்தப்பட்டுவந்தனர். இவர்களில தனது ஆதரவாளர்களான வெளிநாடடு நாணய மோசடியினரை மடடும் விடுதலை செய்து மற்றவர்களை விசாரணை செய்வது சாத்தியமற்றதாக இருந்தது. அத்தோடு ஜே. வி. பி. யினருக்கு மன்னிப்பு வழங்கி சமூகத்தில் கௌரவப் பிரஜைகள் ஆக்கி, தனது சாக்கடை அரசியலில் பங்கெடுக்க வைப்பதன் மூலம் ஜே. வி. பி. இற்குள் இருந்த ஒரு சில முற்போக்கு சக்திகளையும், செயலிழக்கச் செய்யலாம் என்பதையும் உணர்ந்த ஜே. ஆர், ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்துவது போல் குற்றவிசாரணை நீதிக் கமிசனைக் கலைத்தார். அதன் மூலம் ஜே. வி. பி. இனரை செயலிழக்கச் செய்தார். இதனால் 5/6 பெரும்பான்மை ஆதரவுடையஜே. ஆருக்கு ஜே. வி. பி. இளைஞர்களின் விடுதலையால் உண்டான ஆதரவும் சேர்த்திருந்தது. பின்னர் தனது அடுத்த எதிரியான சிறிமாவோ பண்டாரநாயக்காவை செயலிழக்கச் செய்யும் முயற்சியில் செயற்படத் தொடங்கினார். தனது கட்டுப்பாடுக்குள் இருந்த

(11ம் பக்கம் பார்க்க)

# எமது நோக்கு

தமிழீழப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்களை பூண்டோடு வெளியேற்றும் முயற்சியில் இன்று சிறிலங்கா அரசு செயற்பட்டு வருவதன் எதிரொலியாக, கடந்த சில நாட்களுக்கு முன்னர் இராணுவத்தின் கொடுமைகளால் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தத்தம் கிராமங்களுக்குச் சென்றபோது, அங்குகுடியேறவிடாது சிங்களக் கிராமங்களுக்கு மத்தியில்வலுக்கட்டாயமாககுடியமர்த்தப்படுகிறார்கள் இதன் மூலமாக பரவலாக வாழும் மக்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஓர் இடத்தில் குவிக்கின்றனர். மேலும் அவர்களுடைய கலாச்சாரத்தை மாற்றியமைக்கும் நோக்கில் வற்புறுத்தி பௌத்த கோயில்களுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். பௌத்த கொடியைச் சுமக்க வைக்கின்றனர். இளம் சிறார்களை வலுக்கட்டாயமாக சிங்களப் பாடசாலைகளில் கல்வி பயில சேர்க்கின்றனர். இது போன்ற நடவடிக்கைகளின் மூலம், எதிர்காலத்தில் சிறிலங்கா இராணுவத்தால்போராளிகளுக்கெதிராக தாக்குபிடிக்க முடியாத நிலை ஏற்படின் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களை நினைத்த கணத்திலேயே அழித்து விட முடியும். அதோடு எதிர்காலத்தில் இலங்கையில் தமிழினம் வாழ்ந்த அடையாளமே இல்லாதவாறு செய்வதற்கு உரிய முறையில் தமது நீண்டகால வேலைத்திட்டங்களை இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் மிகவும் ராஜதந்திரமாக செயற்படுத்தி வருகிறது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக அண்மையில் ஜே. ஆர். பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ''ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு முகாம்களிலிருந்து வெளியேறி ஜனநாயக முறையிலான வாழ்க்கையை தீவிரவாதிகள் தொடங்கினால், நிபந்தனையற்ற உதவிகள் வழங்குவதாகவும் கூறியிருந்தார்.'' 1982ம் ஆண்டு லெபனானிலுள்ள சப்பிரா, சட்டிலா என்னுமிடத்தில் நிராயுதபாணியாயிருந்த பாலஸ்தீன மக்களுக்கு நடந்ததை நாம் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியுமா?

எனவே வரலாற்றின் வளர்ச்சிப் போக்கை நன்கு அவதானித்து, செயற்படவேண்டியதன் அவசியத்தை விடுதலைக்காகப் போராடும் ஒவ்வொரு போராளிகளும் தெளிவுற்றிருக்கவேண்டும். கருவி மோகத்தில் மூழ்கியிருக்கும் ஒவ்வொருவரும், தெளிவாக உணர வேண்டியது யாதெனில், ஒரு குறிப்பிட்ட வர்க்கம் தனது அரசியல் நெறிமுறையை வன்முறைப் போராட்டத்தின் மூலம் நிலைநிறுத்த வேண்டின், இவ்வன்முறைப் போராட்டத்தை நடத்துவதற்கு மிக முக்கியமான கருவி ஒழுங்கமைக்கப்பட்ட உருக்குறுதிகொண்ட மக்களேயாகும்.

இத்தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அமைப்புக் கட்டுதல், மக்களை ஆயுத பாணியாக்குதல் போன்ற வேலைகளை ஓரளவு தொட்டிருந்தாலும், நிலையான ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடக்கூடிய அளவிற்கு முற்போக்குக் குணம்கொண்ட மக்கள் அமைப்பை உருவாக்கியிருக்கிறோமா? அன்றி குறைந்த பட்சம் தேசிய உணர்வுதானும் ஊட்டப்பட்டிருக்கிறதா? என்றால் அது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. ஏனெனில் நிலப்பிரபுத்துவ சிந்தனையிலிருந்து மாறாத கட்டமைப்புக்கொண்ட சமுதாயத்தில் வாழ்ந்துவரும் மக்களில் தத்தம் செயற்பாடுகளில் ஏற்பட்ட தடைகளினால் சமுதாயத்தைப் திருப்பிப் பார்க்கத் தொடங்கியவர்களே இன்றைய போராட்டத்தின் கதாநாயகர்கள். இவர்களின் அரசு உத்தியோகம், விவசாயம், வியாபாரம், உயர் கல்வி போன்றவற்றில் ஏற்பட்ட தடைகளே இவர்களைப் போராட்டத்தை நோக்கித் திசை திருப்பியவைகளாகும்.

மிகவும் இறுக்கமான சமுதாயக் கட்டமைப்பிற்குள் இருந்த இவர்கள், இக்கட்டமைப்பை உடைத்து வெளியேறியபோது, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்கள் வெகுவிரைவில் இவர்களை அணி திரட்டுவதற்காகக் கருவிமோகத்தை ஊட்டினரேயன்றி, அரசியல் ரீதியாக பிரச்சினைக்குரிய போதிய தெளிவு கொடுக்கப்படவில்லை. ஒடுக்கப்பட்ட நிலையில், சித்தாந்த ரீதியாக அணிதிரட்டப்படாது, கருவி ரீதியாக அணிதிரட்டப்பட்ட இவர்கள் ஒருசில காலகட்டங்களில் கருவிப் போராட்டத்தில் வெற்றிபெற்றிருந்தாலும், தொடர்ந்து உள்நாட்டு, வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடைபெறவிருக்கும் நீண்ட காலப் போராட்டத்தில் வெற்றிபெற முடியாதென்பதை உணரத் தவறிவிட்டார்கள். இவர்கள் உணர்ந்ததெல்லாம் தமக்கேற்பட்ட தடைகளுக்கும், இன்னல்களுக்கும் எதிராக எதிரியைப் பழிவாங்கவேண்டும் என்பதேயாகும்.

வரலாற்று ரீதியாக உலகளாவிய போராட்டங்களை எடுத்து நோக்கின், ஸ்திரமான போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய அரசியல் இராணுவ

(10ம் பக்கம் பார்க்க)

# மலையக மக்களின் பிரஜாஉரிமை பற்றி

தோழர் க. உமாமகேஸ்வரன்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் க. உமாகேஸ்வரன் மலையக மக்கள் தொடர்பாக நடந்த கூட்டத் தொடரின் இறுதி நாளன்று, மலையக மக்களுக்கு பிரஜா உரிமை கொடுக்கப்பட்டமை தொடர்பாகத் தெரிவித்த கருத்தின் சுருக்கத்தை கீழே காணலாம்.

சிறிலங்கா இனவாத அரசிடமிருந்து, மலையக மக்களுக்கு சிறிய உரிமையாயினும் கிடைக்கப் பெற்றதையிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் அம்மக்களுடன் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறது. சிறிலங்காவின் பொருளாதாரத்தை முன்னேற்றியதில் பெரும்பங்கு வகிக்கும் தேயிலைத் தோட்டத்தில் பணி புரிபவர்களாகிய இம்மக்கள், 1948ல் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு, சிறிலங்காவிலிருந்து விரட்டியடிக்க தயாரான நிலையில் இருந்தபோது, அன்றைய முதலாளித்துவத் தலைமைகளினால் புறக்கணிக்கப்பட்ட இம் மக்கள் தை மாதம் 15ம் தேதி மீண்டும் அரசியல் அரங்கத்திற்கு அவசியமானவர்களாகிறார்கள்.

இன்று தமிழ் தேசிய இனத்தை பூண்டோடு அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இனவாத அரசானது மறு பக்கத்தில் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தாகி 21 ஆண்டுகளாகியும் தீர்க்கப்படாத நிலையில் இருக்கும் எமது சகோதரர்களான மலையக மக்களின் பிரச்சனைக்கு கடந்த மாதம் நடத்தப்பட்ட பிரார்த்தனையால் பிரஜாஉரிமை கொடுக்க ஆதரவளித்துவிட்டனர் என்றால் இது எம்மை எல்லாம் ஆச்சரியப்படுத்தக் கூடிய தொன்றேயாகும். இந் நிலைக்கு அரசு தள்ளப்பட்டதற்கான அக, புற காரணங்கள் பல உண்டு. ஆனால் இலங்கை சமுதாயத்தோடு மீண்டும் இணைத்துக் கொள்ளவிருக்கும் இம்மக்கள் இப் புதிய பிரஜாஉரிமை நாடகம்பற்றி மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கவேண்டிய உரிமைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டுபோக வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. இதில் இரு வகையான நிலை ஏற்பட சாத்தியக் கூறுகள் உண்டு. ஒரு பக்கத்தில் எதிர்த்தரப்பில் உள்ள அதிதீவிரவாத பிற்போக்கு சக்திகள் எல்லோரையும் எதிர்க்க வைத்து நடைமுறைப் படுத்த முடியாத தொன்றாக்கிவிடலாம். மறுபக்கத்தில் இத்தனை எதிர்ப்புகளுக்கும் மத்தியில் உரிமைகளை வழங்கியுள்ளோன் என்னும் போர்வையில் எதிர்காலத்தில் வரவிருக்கும் தேர்தலில் இம்மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொள்ளலாம். மொத்தத்தில் கடந்த காலங்களில் நடந்த ஒப்பந்தங்கள் போல் கடதாசித் துண்டோடு நின்று விடாமல் பார்ப்பதில் மிகவும் உறுதியாயிருக்க வேண்டும்.

இதையே இம்மக்களின் முழுமையான வெற்றியாக கருதவைத்து, ஆங்காங்கே துளிர்க்கும் புரட்சிக் குணாம்சங்களையும் மழுங்கடித்து மீண்டும் உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டலுக்குள்ளாக்க முனைபவர்களுக்குப் பலியாகமல் நிரந்தர அமைதிக்கும், இலங்கையின் பிரஜைகளாக வாழ்வதற்கும் உகந்த முறையில் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை ஒவ்வொரு மலையக மக்களும் மறுபரிசிலனை செய்து கொள்ளவேண்டும்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு முதலாளித்துவ தலைமைகள் விட்ட தவறுகளை மட்டும் மனதிற்கொண்டு, தாம் மலையகத் தமிழ் மக்கள் என்ற ஒதுக்கப்பட்ட மனோநிலையில் தொடர்ந்தும் வாழாது இம்மக்கள்; தம்மை ஒரு சுரண்டலுக்கு எதிராக போராடும் இயக்கங்களுடன் இணைத்துக் கொள்வது அவசியமாகிறது. அடிப்படையில் இப் பாட்டாளி வர்க்கமும் கல்வி, சுகாதாரம், நிரந்தர வேலைவாய்ப்பு, குடியிருப்பு வசதி போன்றவற்றில் மற்றைய தொழிலாளி, விவசாயி மக்களைப் போலல்லாது மிகக் கீழ் தரமாக ஒடுக்கப்பட்டே வந்துள்ளார்கள். விடுதலைக்காகப்போராடும் பல இயக்கங்களும் அம்மக்களின் செயல் முறைகளை தாமே தீர்மானித்து அதிதீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிக தவறான அணுகு முறையாகும். அம் மக்களின் நியாயமான தேவைகளுக் கூடாக புரட்சிகர எண்ணங்களை வளர்த்தெடுக்க வேண்டும். இதன் மூலமே இவர்களின் தேசிய இன உணர்வுகளைத் தட்டி எழுப்பமுடியும். இதுவே பூரண அமைதிக்கு வழி வகுக்கக்கூடிய தொன்றாகவும் அமையும்.

எனினும் இன்றைய காலகட்டத்தில் நாம் இன்னொன்றையும் தெளிவாக உணரவேண்டியுள்ளது. குறிப்பிட்ட ஒரு சிலர் இலங்கை பிரஜைகளாக அங்கீகரிக்கப்படும் மீதியினர் சிறிமா—சாஸ்திரி. ஒப்பந்தத்தின் கீழ் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்பட்டு மீண்டும் ஏற்றுமதிப் பொருட்களைப் போல கப்பலில் ஏற்றி அனுப்பப்படவும் உள்ளார்கள். இந்த ஏற்றுமதிப் பொருட்கள் யார்? இவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மாத்திரமன்றி முதலாளித்துவ சுரண்டலுக்கு உட்பட்டதிலும் மற்றயவர்களை விட எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். எனவே இம்மக்களும் மற்றைய மக்களைப் போலவே இலங்கைப் பிரஜைக்குரிய அந்தஸ்தை பெறவேண்டும். இவ் இக்கட்டான நிலையில் தற்காலிகமாக தமக்கு கிடைத்த பிரஜா உரிமையை நன்மையாகக் கருதி ஏற்றுமதிப் பொருட்களாக்கப்பட்ட எமது சகோதரர்களை மறப்போமாயின், எமது சகோதரர்களை மட்டுமல்ல எதிர்காலத்தில் எம்மையே நாம் பாதாளத்தில் தள்ளியவர்களாவோம்.

இலங்கையில் பொருளாதாரத்தின் ஈடேற்றத்திற்காக 150 ஆண்டுகள் எத்தனையோ மக்களின் இன்னுயிரை ஈர்ந்த இம் மக்கள் எதிர்காலத்தில் அந்த முதலாளித்துவ சக்திகளின் ஆளுமைக்குட்படாது, குறிப்பிட்ட வேலைக்கென்று ஒதுக்கப்பட்டு மற்றைய சமூகக் குழுக்களிலிருந்து பிரிந்து வாழாது, தமக்கு எதிராக போடப்பட்ட அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்து நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்வில் மற்றைய மக்களைப் போலவே பங்கெடுத்து வாழ வேண்டும் என்பதே எம்து எண்ணமாகும். ★

# சமூக பிளவுகளின் இறுதி விளைவு சமுதாய அழிவேயாகும்

கடந்த இதழில் ''தேசிய இன விடுதலையில் இஸ்லாமிய இளைஞர்கள்'' என்ற தலைப்பில் இஸ்லாமிய மக்களின் உரிமைகள் பறி போய்க் கொண்டிருந்த போதும், அவர்களின் பாரம்பரிய நிலங்கள் பறி போய்க் கொண்டிருந்த போதும் சந்தர்ப்பவாத போக்குகளைப் பின் பற்றிய இஸ்லாமிய முதலாளித்துவ தலைமைகளைப் பற்றி சற்று ஆராய்ந்தோம். தொடர்ந்தும் இம் முதலாளித்துவ சந்தர்ப்பவாதிகளின் நடவடிக்களைப் பார்க்கு முன்னர், எம்மக்களில் அதிகமானோர் இவ் இஸ்லாமிய மக்களின் பூர்வீகத்தையே புரியாதவர்களாக உள்ளார்கள்.

பல வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப் படி கி.பி. 8ம் நூற்றாண்டுக் கால கட்டங்களில் வியாபார நோக்கில் இலங்கைக்கு வந்த அராபிய வம்சா வழியினரே, இம் (MOORS) இஸ்லாமியர்களும் மூர்ஸ் என்று அழைக்கப்படும் பூர்வீக குடிகளாவர். இவர்களுடன் மலாயாவிலும், இந்தியாவிலுமிருந்து வந்த இஸ்லாமியர் உள்நாட்டில் புரிந்து கொண்ட திருமணங்கள் மூலமும் தாய் மொழியாகத் தமிழை கொண்டவர்களே இன்று இலங்கையில் வாழும் இஸ்லாமியர்களாவர்.

எமது நாட்டின் வரலாற்றைத் திரும்பி பார்ப்போமாயின் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், இறைமைக்காகவும் இலங்கையில் வாழும் மற்றைய மக்களைப் போலவே இவர்களும் தமது பங்களிப்பை செய்ததை போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து இன்றுவரையும் நாம் தெளிவாகக் காண முடியும். குறிப்பாக இன்று வடக்கு, கிழக்கு பகுதியில் வாழும் இஸ்லாமிய மக்கள் மற்றைய மக்களைப் போலவே இன்னும் ஒரு படி கூடவே அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். ஏறத்தாழ 12 லட்சம் இஸ்லாமிய மக்களுள் உயர் வர்க்க வசதிகளையுடைய 2 லட்சம் மக்களே இஸ்லாமிய மக்களின் மொத்த வருமானத்தில் 67.4 விகிதத்தை அனுபவித்து வருகிறார்கள்.

இச் சுரண்டல் கொடுமையில் இருந்து விடுபடுவதற்காகவும், மற்றைய தமிழ் சமூகத்துடன் சேர்ந்து தாமும் நசுக்கப்படுவதாலும், சிங்கள முதலாளித்துவ வலையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கிலும் இன்று இஸ்லாமிய மக்கள் விழிப்படைந்துள்ளார்கள்.

இஸ்லாமிய சமூகத்தை மற்றைய சமூகங்களுடன் ஒப்பிட்டு நோக்குகையில், இம் மக்களின் வளர்ச்சிகள் யாவும் கடந்த காலங்களில் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டு வந்ததைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக கல்வியை எடுத்து நோக்கின், 1973ம் ஆண்டு புள்ளி விபரக் கணிப்பின்படி இலங்கை முழுவதிலும் 28 சதவிதத்தினரே எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகக் காணப்பட்டனர். அதே வேளை இஸ்லாமிய சமூகத்தவர்களில் 34.6 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். இதே போன்றே மலையகத் தமிழர்களும் திட்டமிட்டே கல்வி கற்கும் வாய்ப்புகளை இழந்துள்ளனர்.

காரணம் ஓர் இனத்தின் பாரம்பரியத்தை, அதன் கலாச்சாரத்தை அழிக்க விரும்பின் அவ் இனத்தை கல்வி அறிவு இல்லாமல் செய்வதன் மூலமே சாத்தியமாகும். இதுவே இஸ்லாமிய மக்களில் பெரும்பான்மையோர் கல்வி அறிவு அற்றவர்களாகவும், வர்த்தகர்களாகவும் இருப்பதற்குமான காரணமாகும்.

இச்சதி வேலையை இஸ்லாமிய முதலாளித்துவத் தலைமைகளும் மறைமுகமாக ஆதரித்தே வந்துள்ளார்கள். இம்மக்கள் வர்த்தக மனோபாவம் கொண்டவர்களாகவும், கல்வி அறிவு அற்றவர்களாகவும் இருந்ததை, தமது அரசியல் தலைமைத்துவத்தை தொடர்ந்து காப்பாற்றும் நோக்கில் இவ் இஸ்லாமிய முதலாளித்துவ தலைமைகள் பாவித்து வந்ததன் நோக்கம், கல்வி வளர்ச்சி பெற்ற ஒரு சந்ததி உருவானால் தமது பதவிகளையும், வர்க்க நலன்களையும், சொத்துக்களையும் காப்பாற்ற முடியாதென்ற உண்மையை இவர்கள் ஏற்கனவே தெளிவாக உணர்ந்திருந்ததேயாகும். இவ் வகையில் நியாயமான பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ள இஸ்லாமிய மக்களுள், அச் சமூகத்தில் உள்ள நசுக்கப்பட்ட மக்களுக்கூடாக பிரச்சனைக்கு தெளிவான வடிவம் கொடுக்கப்பட வேண்டியது, ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற விடுதலை இயக்கங்களுடைய கடமையாகும். ஏனெனில் கடந்த காலங்களில் முதலாளித்துவ சார்பு தமிழ் தலைமைகளால் தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும், தேர்தலுக்குப் பின்னர் யாவற்றையும் மறந்து தமது அரசியல் லாபங்களையும், சொந்த நலன்களையும் கருத்திற் கொண்டதால் பாதிக்கப்பட்டு நம்பிக்கை இழந்தவர்களில் இஸ்லாமிய மக்களும் அடங்குவர்.

இதனால் இம்மக்கள் இஸ்லாமிய முதலாளித்துவ தலைமைகளிலோ அன்றி தமிழ் முதலாளித்துவ தலைமைகளிலோ அவநம்பிக்கை கொண்டு வருவதும், அதிருப்தி அடைவதும் நியாயமானதே. ஆனால் இன ஒடுக்குமுறைக்கும் எதிராககருவி ஏந்திப்போராடத் தொடங்கிய அமைப்புக்கள் சில, அதே முதலாளித்துவ பாணியில் கடந்த சில காலங்களில் இவ்விரு சமூகங்களிற்கிடையே ஏற்பட்ட கலவரங்களின்போது முதலாளித்துவ சக்திகள் தமது வர்க்க நலனைப் பேணுவதற்காக எம்மைப் பிளவுபடுத்த முனைகின்றனர் என்பதை தெளிவுபடுத்தி, எதிரிக்கெதிராக அம்மக்களை அணிதிரட்டாமல், முதலாளித்துவ சதிவலையில் விழுந்து அம்மக்களுக்கு எதிராகக் கருவிப் பிரயோகங்களில் ஈடுபட்டு அம்மக்களின் அவநம்பிக்கையையும், வெறுப்பையும் சம்பாதித்ததோடு அம்மக்களை போராட்டத்திலிருந்தும் அந்நியப்படுத்தியுள்ளனர்.

ஏனெனில் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கைகளை மட்டும் எடுத்துப் பார்ப்போமானால் அங்கு உள்ள மக்களின் எண்ணிக்கையையும், விகிதாசாரத்தையும் கீழ்க்காட்டப் பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

| மாவட்டம் | இல. தமிழர் | இஸ்லாமியர் | சிங்களர் | இந். தமிழர் |
|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 2,34,348 | 79,317 | 10,645 | 3,868 |
| அம்பாறை | 78,375 | 1,61,481 | 1,46,371 | 1,410 |
| திருகோணமலை | 86,745 | 74,403 | 86,349 | 6,767 |
| மொத்தம் | 3,99,406 | 3,15,858 | 2,43,358 | 12,045 |

இதன்படி 41% தமிழரும், 32% இஸ்லாமியரும், 25% சிங்களவரும், 1% வீதம் இந்திய தமிழரும், மீதி பிற மக்களும் வாழும் புவியியல் பரப்பைக்கொண்ட கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய மக்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களை எம்மிடமிருந்து அந்நியப்படுத்தி தமிழீழப் போராட்டத்திற்கான எதிர்ப்புகளைச் சம்பாதிப்பதன் மூலம் எந்த அடிப்படையில் நாம் தமிழீழப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்?

இந் நிகழ்ச்சிகளின் மூலம் இவ்வியக்கங்களின் அரசியல் போராட்டத் தெளிவின்மையையும், இம்முயற்சியில் வெற்றியடைந்த முதலாளித்துவத்தின் சாமர்த்தியத்தையும், காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் தமிழீழம் ஒன்று அமையுமானால் இன்று சிறிலங்கா இனவாத அரசால் கொடுமைப்படுத்துவதிலும் பார்க்க மோசமான கொடுமைப் படுத்தலுக்குள்ளாவோம், அங்கு உரிமைக்காகப் போராட முடியாது என்ற எண்ணங்கள் உருவாகுவது நியாயமானதே.

உதாரணமாக பல சமூகங்கள் நெருக்கமாக வாழும் திருகோணமலை மாவட்டத்தில், இஸ்லாமிய சமூகத்தின் மேல் போதிய ஆதாரமில்லாது நடாத்தப்பட்ட கருவிப் பிரயோகத்தின் எதிரொலியாக, மூதூரில் முதலாளித்துவ சக்திகளின் ஆதரவோடு 5 தமிழ் வீடுகள் இஸ்லாமியரால் தீக்கிரையாக்கப்பட்டன. இதற்குப் பழிவாங்கும் நோக்கோடு குறிப்பிட்ட இயக்கம் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்லாமியரது வீடுகளைக் கொள்ளையடித்தும், பெண்களை அவமானப் படுத்தியும், வீடுகளை தீக்கிரையாக்கியும் விடுதலைப்போராளிகளுக்குரிய குணாம்சங்களை இழந்து இன்று அவமானகரமான நிலையில் உள்ளது.

நிராயுதபாணிகளான இம்மக்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு இனவாத அரசின் கூலிப்படைகளிடம் சரணடைந்துள்ளார்கள். இக்கூலிப்படைகளிடம் ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இஸ்லாமிய மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பை, இச்சம்பவத்தின் மூலம் கூலிப்படையினர் நிவர்த்தி செய்திருக்கின்றனர் எனலாம். தமிழ் சமுதாயத்துள் ஒரு மத அடிப்படையிலான பிளவை ஏற்படுத்தி மேலும் போராட்டத்தைப் பலவீனமாக்க முனைந்துள்ளார்கள். ஏற்கனவே பௌத்த - இந்து மதக்கலவரங்களை உருவாக்கி பல கோயில்கள் இடிக்கப்பட்டு, மக்கள் தம் வசிப்பிடங்களிலிருந்து விரட்டியடிக்கப் பட்டு அகதிகள் ஆக்கப்பட்டனர்.

அத்தோடு ஒழுங்கமைக்கப் படாத சிங்கள தொழிலாள வர்க்கத்துக்குள், சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தினர் இனவாதத்தைத் தூண்டிவிடுகின்றனர். இதனால் போராட்டத்தின் குணாம்சத்தைப் புரிந்து ஆதரவு கொடுக்க வேண்டிய தொழிலாள வர்க்கத்தினர் இனவாதப் போக்கிற்கு ஆளாக்கப்படுகின்றனர். இந்நிலையிலிருந்து சிங்களத் தொழிலாள வர்க்கம் மீள முடியாதிருக்கும் நிலையில் மேலும் இப்படியான நிலை உருவாகுமானால் தமிழீழம் என்பது கற்பனையில்கூட காண முடியாததாகும். இனவாத அரசானது பிளவு பட்டிருக்கும் இச் சூழ்நிலையை தனக்குச் சாதகமாக்கி ஒவ்வொரு சமூகத்திலுள்ள முற்போக்குச் சக்திகளையும் அழித் தொழித்துவிடும்.

இந்நிலையில் தேசிய விடுதலைக்கான போராட்டத்தில், பொது எதிரிக்கு எதிராக இணைந்து போராட வேண்டிய எமக்குள், இணைந்து போராட முடியாத அளவுக்கு பிளவுகளை உருவாக்குபவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில விடுதலை இயக்கங்களே யாகும். இவர்களின் தவறான நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்த மக்கள் இனவாத முதலாளித்துவ அரசின் பொறிக்கிடங்கில் வீழ்ந்துவிடாது தடுக்கவேண்டியது இன்றைய தலையாய கடமையாகவுள்ளது. இந்நிலை மீண்டும் தொடருமானால் எத்தனையோ தோழர்களின் குருதியில் அமைந்த தமிழீழத்திற்கான அத்திவாரத்தையே கற்பனையில்கூட நாம் காண முடியாதவர்களாகிவிடுவோம்.

★

# புறக்கணிக்கப்பட்ட கண்காணிப்புக்குழு

கடந்த காலங்களில் நடந்து வந்த போராட்டங்களை ஒரு முடிவுக்குக்கொண்டு வந்து, பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் ரீதியான தீர்ப்வைக் காணும் நோக்குடன் செயற்பட்ட இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கொடுக்கும் நோக்கில் 5 விடுதலை இயக்கங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் திம்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டன. யுத்த நிறுத்தத்தைப் பேணல், இராணுவ முகாம்களைவிட்டு வெளியேறாது இருத்தல், சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கல், மற்றும் சுடல் கண்காணிப்பு வலயம், ஊரடங்குச் சட்டம் போன்றவற்றை மூன்று மாதத்திற்குள் இல்லாமற் செய்தல் போன்றவற்றை அரசு ஏற்றுக் கொண்ட பின்னரே பேச்சுவார்த்தை நடைபெற்றது என்பது யாவரும் அறிந்ததே. அதன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது மேற்குறிப்பிட்டவற்றை நடைமுறைப்படுத்தாது, வவுனியா திருகோணமலை போன்ற இடங்களில் இராணுவ முகாம்களை விட்டு வெளியேறி இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு யுத்த நிறுத்தத்தை மீறியதால் பேச்சுவார்த்தை இடையிலேயே தடைப்பட்டது. இச் சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு இந்திய அரசானது 5 விடுதலை இயக்கங்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் டில்லிக்கு அழைத்து இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தரும்படி கேட்டுக் கொண்டது. இதற்குப் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்படவேண்டும் எனவும் அதன் பின்பே பேச்சுவார்த்தை தொடரும் என எல்லோரும் கருத்து தெரிவித்தனர்.

அதற்காக இலங்கை அரசால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒன்று 1985 ஐப்பசி மாதம் 16ம் திகதி நியமிக்கப்பட்டது. இதற்கு எமது கழகம் தவிர்ந்த ஏனைய அமைப்புக்கள் யாவும் ஆதரவு கொடுத்து தாமும் சிலரை சிபாரிசு செய்தனர். இதன் அடிப்படையிலேயே திரு. சிவத்தம்பி, திரு. சிவபாலன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

எமது கழகத்திடம் யுத்த நிறுத்தம் பற்றி கருத்து தெரிவிக்கும்படி கேட்டபோது இன்று இலங்கையில் நிலவும் சூழ்நிலையில் கண்ணியமான முறையில் போர் நிறுத்த நடவடிக்கையை இக்குழுவால் நடைமுறைப்படுத்த முடியாதெனத் தெளிவுபடுத்தினோம். காரணம் யுத்த நிறுத்தம் என்பது இராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையில் நிகழும் சண்டையை மட்டும் குறிப்பதல்ல. இதை எந்த ஒரு நாட்டிலும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாதென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாந்திட்டவாறு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே நடவாது புதிய புதிய இராணுவ முகாம்களை திறப்பது, பழைய முகாம்களை மறுசீரமைத்துப் பலப்படுத்துவது, எண்ணுக்கணக்கற்ற ஆயுதங்களை இறக்குமதி செய்வது, தேசிய பாதுகாப்புப் படையெனும் பெயரில் குண்டர்களுக்கு பயிற்சி கொடுப்பது, இராணுவத்தினரை வெளிநாடுகளுக்கு அனுப்பி சதி வேலைகளுக்கான பயிற்சி கோடுப்பது, வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளை வரவழைத்து இலங்கையிலுள்ள இராணுவத்தினருக்கு பயிற்சி கொடுப்பது, போன்றவையெல்லாமே யுத்தநிறுத்த மீறல்களாகும். யுத்தநிறுத்தத்தை மீறிச் செயற்படும் முதலாவது மனிதராக ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே காணப்படுகிறார். இதன் பின் எந்த அடிப்படையில் ஜே. ஆர். நியமிக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு சரியாக நடக்குமென நாம் எதிர்பார்க்க முடியும் எனவும் இதில் எமக்கு எந்தவித நம்பிக்கையுமில்லையென ஆதர பூர்வ அறிக்கைகளுடன் விளக்கி நிராகரித்திருந்தோம்.

அத்தோடு இக் கண்காணிப்புக் குழுவினர் சுயமாக ஒரு இடத்திற்குச் சென்று நடந்தவை பற்றி விசாரணை நடத்த முடியாத நிலையையும், இவர்களுடன் இராணுவத்தினர் இருப்பின் சம்பவங்களைக் நேரில் கண்டவர்கள்கூடசாட்சி சொல்ல வரமாட்டார்கள் என்பதையும், இராணுவ தளபாடங்கள் இறக்குமதியையோ, இராணுவ தள விஸ்தரிப்பையோ தடுக்கும் உரிமை இவர்களுக்கு இல்லை என்பதையும் சுட்டிக்காட்டி ஒரு பக்கத்தில் ஆயுத இறக்குமதியும், இராணுவ விஸ்தரிப்பும் மறுபக்கத்தில் போர் நிறுத்தமும் பேச்சுவார்த்தையும். இக்கபட நாடகத்தைத் தெளிவுபடுத்தி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு பற்றிய எமது நிராகரிப்பைத் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இக் காரணங்களால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படடவர்கள் தமது பணிகளைச் சரிவரச் செய்ய முடியாதென்பதை சுட்டிக்காட்டியிருந்தோம். உதாரணமாக இக் கண்காணிப்புக் குழுவில் ஜே. ஆருக்கு சார்பானவர்களே பெரும்பான்மையாக உள்ளார்கள். மொத்தத்தில் கண்காணிப்புக்குழுவானது ஜே. ஆரினதும், இராணுவத்தினதும் கட்டுப்பாட்டுக்குள்

ளேயே இருக்கும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் நடுநிலையான விசாரணையையும் நீதியான தீர்ப்பையும் எதிர்பார்க்க முடியாது. தீர்ப்புகளும் சன்சோனிக் குழு போன்றதொரு தீர்ப்பாகவே அமையும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஆனால் இராணுவத்தினர் மூன்று மாதத்துக்குள்ளேயே கட்டுப்பாட்டை மீறி முகாம்களை விட்டு வெளியேறி ரோந்து நடவடிக்கைகள், தேடுதல் நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபடுவது, யுத்தநிறுத்த விதிகளின் படி தடைசெய்யப்பட்டிருந்தும் கண்காணிப்புக்குழுவால் அவர்களைஎதுவும்செய்யமுடியவில்லை. தமிழ்மக்கள்மேல் எண்ணுக்கணக்கற்ற கொடுமைகள் இழைக்கப்பட்டபோதும் குழந்தைகளைக்கூட ஈவிரக்கமின்றிக் கொன்றொழித்தபோதும், இவர்கள்மௌனம் சாதித்ததோடு மட்டுமல்லாது இராணுவத்தினர் போராளிகளுக்கெதிராக செய்த முறைப்பாடுகளையே விசாரிக்க முற்பட்டனர். இராணுவத்தினரின் சாட்சியங்களோடு போராளிகளையே குற்றவாளிகளாகக் கண்டனர். இறுதியாக யாழ்ப்பாணத்தில் 4ம் 5ம், 6ம் திகதிகளில் நடந்த சம்பவங்களே இவர்களைத் தொடர்ந்தும் இருப்பதால் எந்தவித உதவியும் தமிழ் மக்களுக்கு இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியது எனலாம். 4ம் திகதி நடந்த சம்பவத்தில் திரு. சிவத்தம்பியும் மயிரிழையிலேயே உயிர் தப்பினார். இத்திகதியில் நடைபெற்ற கலவரங்கள் பற்றிய தகவலைச் சேகரிக்கும் தமது பணியைக்கூட மேற்கொள்ள முடியவில்லை. இராணுவ முகாமுக்குள் இருந்து வெளியேற முடியாத நிலையில் உள்ளேயே தங்கியிருந்தனர். அரசின் கபட நாடகங்களுக்குத் தாமும் உடந்தையாக இருந்தவர்கள் என்ற களங்கம் தமக்கு வரக்கூடாது என்ற நிலையை உணர்ந்தபின்னரே வெளியேறத் தீர்மானித்தனர்.

இந்நிலையில் இவர்கள் ஜே.ஆருடன் நேரில் பேசி நிலைமைகளை விளக்கிய பின்னரே இராஜினாமாச் செய்ய முனைந்தார். ஆனால் ஜே.ஆர் அதனை நிராகரித்ததுடன் பொதுச்செயலாளரிடம் ராஜினாமாக் கடிதங்களை ஒப்படைக்குமாறும் கூறினார்.

மூலம் இக் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் அடக்குமுறைக்கெதிரான போராட்டம் சுமுகமாகி ஏதாவது ஒரு தீர்வு காணப்படும் காலகட்டங்களில், சுமுகமான தீர்வுக்கு முரணாக நடப்பவர்களை இனங்கண்டு உலகிற்கு அம்பலப்படுத்தி, சமாதானமாக முயற்சிகளை முன்னெடுக்க உதவுபவர்களே இக் கண்காணிப்புக் குழுவினராகும்.

“2-2-74 அன்று புத்தளம் பள்ளிவாசலில் சிங்கள இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.” தேசிய எழுச்சிக்காக ஒவ்வொரு சமூகமும் செய்த பங்களிப்பை நினைவுகூர்வோம்.

ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போல ஜே. ஆருக்கு தேவைப்பட்டதெல்லாம் சன்சோனிக் குழு சமர்ப்பித்தது போன்ற ஓர் அறிக்கை மட்டுமே. இவ் அறிக்கை மூலம் அமெரிக்காவிற்கும் ஏனைய தன் சார்பு நாடுகளுக்கும் பயங்கரவாதம் வளர்ந்து வருவதாகக் காட்டி அந்நாடுகளிடமிருந்து எம்மை ஒடுக்குவதற்குப் போதிய பண உதவிகளையும், ஆயுத உதவிகளையும் பெறுவதே அவரின் நோக்கமாக இருந்தது. இதற்காக சிவபாலனையும், சிவத்தம்பியையும் போதிய அளவு பாவித்தார். இன்று இவர்கள் தேவையில்லையென்பதை, இவர்களை சந்திக்க மறுத்ததிலிருந்து புரிந்து கொள்ளமுடிகிறது.

இன்று ராஜினாமாச் செய்த இருவர் மட்டுமல்ல, நாளை வேறு இருவர் புதிதாக வந்தாலோ அன்றி இன்னும் மேலதிக அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டாலோ, யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்த முடியும் என நினைப்பது வெறும் பகற்கனவேயாகும்.

மீண்டும் சர்வதேச கண்காணிப்புக்குழு பற்றிய ஆர்வமும் காட்டப்பட்டு வருகின்றது. சர்வதேச கண்காணிப்புக்குழு செயற்பட்ட நாடுகளை சற்று திரும்பிப்பார்ப்போமாயின் உண்மை தெளிவாகும். யார் இந்தக் கண்காணிப்புக்குழுவினர்? ஒருநாட்டையோ, அல்லது பல நாடுகளையோ சேர்ந்தவர்கள்

ஆனால் இவர்கள் சமாதானத்தில் அக்கறைகொண்டு, நடந்தவற்றை உலகுக்குத் தெரியப்படுத்த வந்தவர்கள் என யாராவது கருதினால் அதி முட்டாள்தனமாகும். இவர்கள தம் சார்பு அரசை நியாயப்படுத்தும் பொருட்டும், இராணுவம் உட்புக முடியாத இடங்களுக்கெல்லாம் சென்று அவ்விட நிலைமைகள் பற்றி அரசுக்கு தகவல் கொடுப்பதையுமே இன்று முக்கிய கடமையாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றனர். ஒரு நாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட இனத்தைப் பற்றியோ அன்றி அவர்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியான அழிவுகளைப் பற்றியோ இவர்கள் எதுவும் கருத்திற்கொள்வதில்லை.

இவர்கள் தமது செயற்பாடுகளை நம் நாட்டிலும், நடைமுறைப்படுத்தத் தொடங்குவார்களேயானால் நிலைமை மேலும் ஒரு மடங்கு மோசமானதாகவே அமையும். எனவே பூரணமான யுத்த நிறுத்தம் ஒன்று அமைய வேண்டுமாயின், நாமும் சிறிலங்காவின் இராணுவ பலத்திற்கேற்ப சம பலத்தை தயார்படுத்தி, தகுந்த பதிலடி கொடுப்பதன் மூலமே யுத்த நிறுத்தத்தையோ அன்றி இதர நடவடிக்கைகளையோ தீர்மானிக்க முடியும். ★

# காத்திருத்தல்

நேற்றுப் போல இருக்கிறது
எம் திருமணம் நடந்தது!
பந்தலைப் பிரிக்குமுன்,
வந்த உறவினர் போகுமுன்
முதலிரவின் மயக்கம் தெளியுமுன்
நீதான் போய்விட்டாய்.

என் மன ஆழத்திற்கு
இது தெரிந்துதான் இருந்தது
சில வேளை-
திருமணம் உன்னை
மாற்றலா மென்றே
பலவந்தமாக
உன்னை மணந்தேன்.

அப்போது -
எனக்குத் தெரிந்திருக்கவில்லை
லட்சிய வேகத்திற்கு
எதுவுமே தடையில்லை என்பது

இப்போது துக்கப்படுகிறேன்
அன்று உன்னைத்
தடைபோட நினைத்ததற்காக
உன் லட்சியத்தின் நியாயம்
அப்போது புரியவில்லைதான்!

எனினும் ஒரு சந்தோசம்
மனைவியாள படியால்தானே
உன் சாதனைகளில் மகிழ்தலும்
உன்னை நினைத்து அழுதலும்
தடையின்றிச் சாத்தியமாயின.

'இரவுகள் தூங்குவதற்காக'-
என் வரையில் பொய்யாயிற்று.
நிசப்த ராத்திரிகளில்
இடையிட்டு எழும் சத்தங்களில்

ஒரு காலடியோசைக்காய்க்
காத்திருந்து......காத்திருந்து......
இரவின் ஸ்வர சஞ்சாரங்கள்
பாடமாகிப் போயின.

சிலவேளை காலடிகள்
கனத்த பூட்ஸ் ஒலியாய்
நெஞ்சில் தனலைக் கொட்டும்
துவக்கு நுனியில் விசாரணைகள்
பழகி, மரத்தும் போயின.

கனத்த இருளினுள்
கறுப்புப் பூனையைத்
தேடி...தோற்று...
ஆனால் நான் இன்னும்
நம்பிக்கை இழக்கவில்லை.

காத்திருந்த இரவுகள்
கணக்கு வைக்க முடியாமற்
பெருகின
கல்யாணத்தன்று நட்ட முருக்கு
கப்பும் கிளையுமாய்
விரித்து பூத்திருக்கிறது.
பாலர் வகுப்புக்குச் செல்லும்
மகன் கேட்கிறான்:

"ஏனம்மா
எங்கட வீட்டுப் பின்கதவை
இரவில் பூட்டு றேல்ல,
கள்ளன் வந்தா...?"

எனது காத்திருத்தல்
அவனுக்குப் புரிய
இன்னுஞ் சில காலமாகலாம்.
அதன் பின்-
அவன்-
கேள்வி கேட்க மாட்டான்.

ஈழம் "மைத்ரேயி"

# மலையகத் தமிழர் பிரஜாஉரிமை
# ஒரு வரலாற்று நாடகம்

18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் நுழைந்த ஆங்கிலேயர் கோட்டை, யாழ்பாணம் ஆகிய பகுதிகளைத் தமது ஆட்சிக்கு கீழ்க் கொண்டுவந்தனர். 1815ம் ஆண்டில் கண்டிப் பகுதியையும் தமது ஆளுமைக்குள் கொண்டுவந்தனர். அன்றிலிருந்து 1948ம் ஆண்டுவரை ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்து கொண்டே இருந்தன. ஆனால் யாவும் ஆங்கில ஏகாதிபத்தியத்தினால் மிகச் சுலபமாகவே அடக்கப்பட்டன.

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவரப் பட்டதுமே மலையகத்தில் உள்ள சிங்கள மக்களின் நிலங்கள் ஆங்கிலேயரினால் பறிமுதல் செய்யப்பட்டு, காடுகள் அழிக்கப்பட்டுப் பெருந்தோட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அரசுடமையாக அறிவிக்கப்பட்ட தரிசு நிலங்கள் ஏக்கர் 4 பவுண் என்ற மதிப்பில் மிகக் குறைந்த விலைக்கு ஆங்கிலேயக் குடிமக்களுக்கு விற்கப்பட்டன. இம்மாதிரியாகப் பறிக்கப்பட்ட நிலங்களில் பயிரிடவும், தொழில் செய்யவும் மிகவும் குறைந்த கூலியில் வேலை செய்யும் தொழிலாளர் கிடைப்பது மிகவும் அரிதாகவே இருந்தது. மலையக விவசாயிகள் தமது நிலங்களில் தாமே அடிமையாக கூலிக்கு வேலை செய்யஒப்புக் கொள்ளவில்லை. எனவே அக்காலத்தில் இந்தியாவில்-தமிழகத்தில்-நிலவிய கொடுமையான வரட்சியையும், வறுமையையும் பயன்படுத்தி அங்கிருந்து கூலிகளை ஆங்கிலேய அரசு இலங்கைக்கு வரவழைத்தனர்.

லெப்டினன் கேணல் வைற் என்பவரே முதன்முதலாக தமிழ் நாட்டிலிருந்து 14 தொழிலாளர்களை ஏஜெண்டுகள். மூலம் வரவழைத்தவர் ஆகும்.

இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 15 ஷில்லிங் மட்டுமே ஊதியமாக வழங்கப்பட்டது. இந்த 150தொழிலாளர்களும் கவர்னர் பர்னஸ் என்பவரின் ஏஜெண்டுகளின் மூலம் வரவழைக்கப்பட்டவர்களாவர்.

இதன் முதல் கட்டமாக 150 தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள் இலங்கைக்கு 1828ம் ஆண்டில் வரவழைக்கப்பட்டனர்.

இந்தியாவையும் இலங்கையும் ஒன்றாக ஆண்ட ஆங்கிலேய காலனி ஆட்சி இரு நாடுகளிலும் உள்ள விவசாயத் தொழிலாளர்களின் நிலபாத்திய உரிமைகளைப் பறித்தபோது அவர்களுக்கு ஆதரவாக யாரும் போராட முன்வரவில்லை. தென்னிந்தியாவில் நிலங்களை இழந்த விவசாயிகள் இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் தவிர்க்க முடியாமல் கூலி அடிமைகளானார்கள்.

"ஆரம்ப காலங்களில் தமிழகத்தில் இருந்து சென்ற தொழிலாளர்கள் தங்களின் வேலைக்குரிய தோட்டங்களை அடைவதற்குச் சுமார் 150 மைல் தூரத்தைக் கால் நடையாகவே நடந்து செல்ல வேண்டியிருந்தது என்று W.C, "ட்வைணம்" என்ற ஆங்கில அதிகாரி தனது அறிக்கையில் 1871ல் தெரிவித்திருந்தார்.

தொழிற் சங்கங்கள் இல்லாமையும் மற்றச் சமூகங்களில் இருந்து அரசியல் ரீதியாகத் தனிமைப் படுத்தப்பட்ட நிலையும் இவர்களை ஆரம்பத்தில் இருந்தே தங்களுக்காக வாதாடச் சக்தியற்றவர்களாக்கியது எனலாம்.

கடின உழைப்பு, மிக மோசமான சுகாதார வசதிகள், ஊட்டச் சத்தின்மை ஆகியவை காரணமாக இவர்களின் இறப்பு விகிதம் அதிகரித்தது. 1883க்கும் 1891க்கும் இடையில் நாடு முழுவதுக்குமான இறப்பு விகிதம் 7.42 சதவிகிதமாக இருந்தபோது தோட்டத் தொழிலாளர்களின் இறப்பு விகிதம் 27 சதவிகிதமாக இருந்தது. படிப்பு அறிவின்மையும், கலாச்சார ரீதியில் தாழ்த்தப்பட்டமையும், தோட்டத் தொழிலாளிகள் முதலாளிகளிடமும், கங்காணிகளிடமும் அடங்கிப் போனமைக்கான காரணங்களுள் முதன்மையானவையாகும்.

இலங்கையின் மற்றப் பகுதிகளில் நடந்த அரசியல் தொழிற் சங்க வளர்ச்சிப் போக்குகளில் இருந்து மலையகத் தமிழர் வேண்டுமென்றே தனிமைப்படுத்தப் பட்டனர். 1930ம் ஆண்டு வரை இவர்களிடம் ஒருங்கிணைந்த அமைப்பு எதுவும் உருவாகவில்லை. இதன் பின்னரே தோட்டத் தொழிலாளர் மத்தியில் போராட்ட உணர்வு முளைவிடத் தொடங்கியது.

1931ல் S. நடேசஐயர் என்பவரால் தொடங்கப்பட்ட அகில இலங்கை உழைப்பாளர் சம்மேளனம் என்ற அமைப்பு இரண்டு ஆண்டுகளே உயிர் வாழ்ந்தது.

இக்காலகட்டத்தில் E. A. குணசிங்கா S. W. R. D. பண்டார நாயக்கா ஆகியோர் இந்தியாவில் இருந்து தோட்டங்களுக்கு வரும் தொழிலாளர்களைக் கட்டுப் படுத்தவேண்டும் என்று குரலெழுப்பினர். இனவாதத்தையும் தூண்டிவிட ஆரம்பித்தனர்.

1939 யூன் 25ம் நாள் ஜவகர்லால்நேருவின் ஆலோசனையின் பேரில் 'இலங்கை-இந்தியர் காங்கிரஸ்' என்ற அமைப்பு தொடங்கப் பட்டது. இதுவே பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகத் தோற்றங்கொண்டது. தொழிலாளர்கள தொண்டமான் தலைமையில் அணிதிரண்டனர்.

1947ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 7 பிரதிநிதிகள் மலையக மக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டனர். அந்த ஆண்டில் கொண்டுவரபட்ட தேர்தல் திருத்தச் சட்டமூலம் பிரஜா உரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமை கிடையாதுஎன்றுமறுத்ததன்மூலம் மலையகத் தமிழர் தங்கள் வாக்குரிமையை இழந்தனர். இதனால் இவர்கள் பிரதிநிதித்துவப் படுத்திய தேர்தல் தொகுதிகள் சிங்களவர்களினால் நிரப்பப்பட்டன.

1948—49ம் வருட பிரஜா உரிமைச் சட்டங்களின்படி 1951 ஆகஸ்ட் 5ம் திகதிவரை பிரஜா உரிமைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சுமார் 825,000 பேருக்கு உரிமை கோரி 237,034 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 1948ல் பிரஜா உரிமைச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் இந்திய பாஸ்போர்ட் வைத்திருந்த அனைவரையும் இந்தியா ஏற்கவேண்டி இருந்தது. இதன்படி 1949 முதல்

1964 வரை 184, 771 பேர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இரு அரசாங்கத்தாலும் பிரஜைகளாக அங்கீகரிக்கப்படாத மலையகத் தமிழர் 'நாடற்றவர்' என்று தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு 1948வரை பிரஜா உரிமை இருந்தது. 1948ல் இயற்றப்பட்ட பிரஜா உரிமை சட்டமே இவர்களது தேசிய உரிமையைப் பறித்தது. எனவே இவர்கள் நாடற்றவர்களோ, பிரஜா உரிமை அற்றவர்களோ அல்லர். இவர்கள் பிரஜா உரிமை அல்லதுதேசிய உரிமை பறிக்கப்பட்டவர்களாவர். இலங்கையில் உள்ள இந்தியர்களின் தொகை 1964 செப்ரெம்பர் 25 வரை 10,08,269 எனக் கணிப்பீடு செய்யப்பட்டது. இதில் இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்போர் எண்ணிக்கை 28,269. எனவே எஞ்சிய 9,80,000 பேரின் பிரஜா உரிமை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த சிறிமாவோவும், சாஸ்திரியும் உடன்பட்டனர். 1964 அக்டோபர் 30ம்திகதி சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ் ஒப்பந்தத்தின்படி 9,80,000 பேரில் 1,25,000 பேருக்கு 15வருட காலத்தில் இந்தியா பிரஜா உரிமை வழங்குவதென்றும் 3,00,000 பேருக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்குவதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மீதி பிரஜா உரிமை மறுக்கப்பட்டவர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட ஆரம்பித்தனர். மலையக மக்கள் இலங்கையில் சகல மக்கள் பிரிவுகள் போல் இலங்கையின் தற்போதைய சமூக உருவாக்கத்தை ஆக்குவதில் அவர்களும் பங்களித்ததன் மூலம் தனித்துவம் உள்ள ஒரு மக்கட் பிரிவாக உருவகப்படுத்திக்கொண்டவர்கள் என்பது உண்மையே. ஆனால் துரதிருஷ்டவசமாக ஏனைய தேசிய இனங்களைப் போல் இன்று இலங்கையின் அரசியலில் ஒரு தாக்கமான பங்களிப்பைச் செலுத்தமுடியாதவர்களாய் இருக்கிறார்கள் என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மையே ஆகும்.

காலம்காலமாக அவர்களை ஏமாற்றி வந்த அரசியல் தலைமைகளும், அவர்களது வர்க்கம் சாராத தலைமைகளுமே அவர்களது இத்தகைய நிலைகளுக்குக் காரணமாயிற்று. அண்மையில் 94,000 பேருக்கு வழங்கப்பட்ட பிரஜாவுரிமையையும் ஒருகண் துடைப்பேயாகும். வன் செயல்களாலும், கொடூர அடக்குமுறைகளாலும் தொடர்ச்சியாகப் பாதிப்புக்கு உள்ளாகிவரும் மலையக மக்களின் எதிர்காலத்தை இத்தகைய சட்டங்களால் மீட்டுவிட முடியாது.

மலையக மக்கள் தமது விடுதலையை வர்க்க அணி சார்ந்த தமது போராட்டக்கரங்களில் தமது விடுதலையை எடுத்துக்கொள்ளும் வரை இது தொடரவே செய்யும். ★

## எமது நோக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்கள் இன்றி எத்தனையோ போராட்டங்கள் நசுக்கப்பட்டதையும், தோல்விகண்டதையும் நாம் கவனத்தில்கொள்ளவேண்டும். இவற்றை எமக்கொரு பாடமாகக்கொண்டு, மேலும் எமது புவியியல், கலாச்சார, பொருளாதார நிலைகளுக்கு உகந்த முறையில் எமது சமுதாயக் கட்டமைப்பைப் புரிந்துகொண்டு போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய மக்கள் அணியைப் பலப்படுத்த வேண்டும். இன்றேல் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட இறுக்கமான சமுதாயக் கட்டமைப்புக்குள் இருந்து வெளியேறியவர்கள், சிறிலங்கா இராணுவத்தின் ஒடுக்குமுறையை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படும்போது, சிறீலங்கா, இனவாதஅரசின் சேவகர்களாகிமக்களின் சுதந்திரத்தை அவர்களிடம் ஒப்படைத்தவர்களாவர். எனவே இன்றைய நிலையிலாவது, போராட்டத்தின் உண்மை நிலையை உணரவைத்து, மக்களை நீண்டகாலப் போராட்டத்திற்குரிய முறையில் அணி திரட்ட வேண்டும். இன்றுவரையும் கருவி மோகத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட மக்களை, நீண்டகால கருவிப் பேரராட்டம் முனைப்பாக இருக்கும் போது, போராட்டத்திற்குரிய முறையில் அணிதிரட்ட முடியுமா? என்ற வினா எழுவது நியாயமானதே.

ஆனால் விடுதலை இயக்கங்களைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் விட்ட தவறுகளை தற்போதாவது உணர்ந்து மக்கள் அமைப்புகளை பலப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவ்வேலைத் திட்டத்தை மக்கள் ஆரம்பத்தில் நிராகரிப்பது தவிர்க்க முடியாததொன்றே. ஏனெனில் போராட்டத்தின் இன்றைய நடைமுறைச் சூழ்நிலை எந்நேரமும் அபாயகரமானதாகவும், உயிருக்கு உத்தரவாதமற்றதாகவுமே உள்ளது. ஆனால் போராட்டத்தைப் பொறுத்தவரை, இன்றைய நிலையில் மக்களை நாம் குழந்தைகளுக்கொப்பாகவே பார்க்க வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி கருதியும், பிற நோய்களால் பீடிக்காது காப்பாற்றுவதற்காகவும், எவ்வாறு அவர்களின் பெற்றோர் கசப்பான மருந்தை பிடிவாதமாக வெறுக்கும் குழந்தைக்கு உட்செலுத்துகிறார்களோ, அதுபோன்றே பிற்கால நன்மை கருதி நாமும் மக்களுக்கு நீண்ட காலப் போராட்டத்திற்கு அரசியல் ரீதியான தெளிவுகளைக் கொடுத்து மக்களைப் பலமான அணியாக்க வேண்டும்.

இதன்மூலமே திட்டமிட்டு எம்மை நசுக்க முனையும் சிறிலங்கா இனவாத அரசினதும், அதன் கூலிப் படைகளினதும், ஒடுக்குமுறையிலிருந்து எமது மண்ணையும் மக்களையும் மீட்டெடுக்க முடியும். எனவே துரித வெற்றியை நோக்கிய போராட்டத்தையோ, அன்றி பழிவாங்கும் மனோபாவத்தையோ தவிர்த்து, நடைமுறைக்குகந்த போராட்ட வழி முன்னெடுக்க வேண்டிய அவசியத்தைப் பார்த்த நாம், முக்கியமான இன்னொன்றையும் உணரவேண்டும். இந்நடவடிக்கையை குறிப்பிட்ட ஒருசில தனிநபராலோ, அன்றி தனியொரு அமைப்பாலோ முன்னெடுக்கக் கூடியதொன்றல்ல. தமிழீழ விடுதலைக்காகப் போராடும் பல அமைப்புகளும், அவரவர் தொழிற்சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், இராவணு அமைப்புக்கள் போன்றவற்றினூடாக தடைமுறைப்படுத்துவதன் மூலமே இம்மக்கள் அமைப்பை இறுக்கமாக வலுப்படுத்தமுடியும். இதன் மூலமே ஜே.ஆரின் திட்டமிட்ட இன அழிப்பை திட்டமிட்ட முறையில் வெல்லமுடியும். ★

## ஆறு ஆண்டு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையினர், பாராளு மன்ற உறுப்பினர்கள் போன்றோ ரிடமிருந்து இராஜினாமாக் கடிதங்களை வாங்கிவைத்துக் கொண்டு உயர்நீதிமன்ற விசாரணை முடிவுகளைப் புறக்கணித்த தோடு, புதிய விசாரணைக் கமிசனையும்அமைத்து அதிகார துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவை அரசியலிலும் கலந்து கொள்ளாது ஒதுக்கியதோடு 7 வருடங்களுக்கு அவரின் குடிரிமையையும் பறித்தெடுத்தார். இதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பல்வேறு உட்பூசல்கள் உண்டாகி, உடைந்து செயலிழந்தது.

இப்படியாக தனது அரசியல் சாணக்கியத்தால் தனக்கு எதிராகச் செயற்படக்கூடியவர்களையெல்லாம், செயலிழக்கச் செய்து வெளிநாட்டு முதலாளிகளுக்கு நம்பிக்கையூட்டி, அவர்களை முதலிடச் செய்து, தன் சார்பு சக்திகளையெல்லாம், திருப்திப் படுத்திவந்த ஜே.ஆர். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தண்டனைக்கான காலக்கெடு முடிய ஒரு வருடத்திற்கு முன்னரே இரக்கமான சிந்தனையோடு அவருக்கு குடியுரிமை வழங்கியதன் சூழ்ச்சி என்னவென்பதை நாம் தெளிவாக உணர வேண்டும்.

இந்நிலையில் இன்னுமொன்றையும் நாம் உணர வேண்டும், இது போன்ற வெளியார் முதலீட்டுக் காலகட்டங்களில் சிறிமாவோ பண்டாரநாயக்கா எதிர்த்தார் என்பதால் இவர் இவ்வகையான முதலீட்டாளர்களுக்கு எதிரானவர் என்றோ அன்றி, தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண ஆதரவானவர் என்றோ பொருள்படாது. குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை தனது அரசியல் போட்டியாளரினால் முன்வைக்கப்பட்டால், அதைத் தனது அரசியல் எதிராளரைத் தாக்கும் ஆயுதமாக பயன்படுத்தி இலாபம் தேட முயல்வதே இவர்களின் முழுமுதல் அரசியல் வேலைத்திட்டமாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே சிறிவோமாவின் எதிர்ப் பிரசாரத்தையும் பார்க்க வேண்டும்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்குக் குடியுரிமை வழங்கியதன் சூழ்ச்சி என்னவெனில், ஏகாதிபத்திய சக்திகளின் முதலீடுகளுக்கு இலங்கையைச் சந்தையாக்கிய பொருளதாரத் திட்டத்தால் ஏற்பட்ட அடிப்படைத் தேவையான பண்டங்களின் விலையேற்றமும், தேசிய வருவாயின் வீழ்ச்சியும். கடந்த காலத்தில் 1059 கோடியே 18 லட்ச ரூபா (105 ஆயிரம் 918 மில்லியன் ரூபா) அறவிடமுடியாக் கடனாகவும், வருடாவருடம் 1 கோடி ரூபாவும் (10 மில்லியன் ரூபா) அதிகரித்துக் கொண்டுமிருக்கின்றது. விவசாயிகளுக்குரிய உதவிகளைப் புறக்கணித்தும், தண்ணீர் போன்றவற்றுக்கு கூட வரி அறிவிட்டமையும், பாரம்பரிய நிலங்களிலிருந்து விவசாய மக்களை வெளியேற்றி பன்நாட்டு முதலாளிகளின் தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் கொடுத்தது, அரச கூட்டுத் தாபனங்களை தனியார் முதலாளிகளின் கைகளில் ஒப்படைத்தமை, போன்றவற்றினால் தொழிலாளர்கள் வேலைவாய்ப் பிழந்தமை, பல்கலைக்கழக மாணவர்கள் சுயமான முறையில் தமது கல்வியைத் தொடரமுடியாதபடி அரசியல் சக்திகளின் தலையீடுகளும், குண்டர்களின் அடாவடித்தனங்களும், அனேக மாணவர்களின் கல்விவசதியை சீரழித்தமை போன்றவற்றால் விவசாயிகளினதும், தொழிலாளர்களதும், மாணவர்களதும் பாதைகள் தடைபட்டு, தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் தம் தம் அணிகளூடாக தம் எதிர்பைக் காட்டத் தொடங்கினர். உதாரணமாக அரசாங்கப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் குறிப்பாக கிராமப் பகுதி மாணவர்கள்கூட பாடசாலைகளின் தரக்கேட்டை எதிர்த்து, அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர். இதற்காகப் பல பாடசாலைகள் மூடப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள், கைது செய்யப்டனர். இதுபோன்றே 1980ம் ஆண்டு தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளுக்காக நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஒரு நாளில் 80 ஆயிரம் பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்டு தமது குடும்பத்தை நடத்தமுடியாத பல தொழிலாளர்கள் தற்கொலைகூட செய்துள்ளனர். மற்றும் விவசாயிகள் விதை பொருட்களையோ, உரத்தையோ நியாயமான விலையில் பெறுவதற்கான ஒழுங்கமைப்புகள் சீர்குலைந்தமை, அறுவடைக் காலங்களில் வெளிநாட்டிலிருந்து அதே உணவுப் பொருட்களை இறக்கி பொருட்களின் விலையை வீழ்ச்சியடையச் செய்ததோடு, வறிய விவசாயிகளையும் செயலிழக்கச் செய்து அதிருப்திக்குள்ளாக்கியமை போன்ற நடவடிக்கைகளால் 2/3 வீதமான மக்களின் ஏகோபித்த எதிர்ப்புகளை எதிர் நோக்கியுள்ளார்.

மறுபக்கத்தில் இவையெல்லாவற்றிற்கும் மேலாக தேசிய இனங்களிற்கிடையிலான முரண்பாடுகளை தீர்க்கும் முயற்சியில், இனவெறிப் போக்கைப் பின்பற்றியதாலும், ஏகாதிபத்திய சியோனிச சக்திகளின் உதவிகளை நாடியதாலும், மனித நேயத்தை மதிக்கும் மக்களிடமிருந்தும், நாடுகளிடமிருந்தும், அந்நியப்படத் தொடங்கியமை நாட்டின் பொருளாதார நிலைக்கோ அன்றி வரையறுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் மீளக்கொடுக்கும் அடிப்படையிலோ, அல்லாமல், இனவெறி ரீதியாக ஒரு இனத்தை அழித்தொழித்து விடவேண்டுமென்று

கங்கணம்கட்டி ஏகாதிபத்திய நாடுகளிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தார். இவற்றின் விளைவாக ஜெயவர்த்தனா இன்று ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து தன்னை விலக்கிக்கொள்ள முனைந்தாலும், அவைகள் இவரைவிடக்கூடிய நிலையில் இல்லை. காரணம் நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் பன்னாட்டு முதலாளிகள் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்கிறார்கள். உதாரணமாக நாட்டின் பெரும் பொருளாதாரத்தையே பாதுகாக்கும் விவசாயம், போக்குவரத்து மற்றும் ஒரு நாட்டின் மிகவும் இரகசியமாக பாதுகாக்கப்படவேண்டிய இராணுவத் தந்திரங்கள் யாவும் இன்று நாட்டின் ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டை விட்டு விலகி பல நாட்களாகிவிட்டன.

இவ்வகையான அடக்குமுறை ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவது தவிர்க்க முடியாததொன்றேயாகும். அப்படிக் கிளர்ந்தெழும் மக்களுக்கு முற்போக்கு சக்திகள் வடிவம் கொடுப்பதும், ஒடுக்குமுறை அரசுக்கெதிராக போராட்டங்களை முன்னெடுப்பதும், இது தான் முதற்தடவையல்ல என்பதை ஜெயவர்த்தனா அறியாதவரல்ல. ஏற்கனவே தமிழீழப் பகுதிகளில் உருவாகியுள்ள புரட்சிக் குணாம்சங்கள் போன்று தெற்கிலும் உருவாகி வருவதையும், நன்கு உணர்ந்துள்ளார். எனவே கூடிவரும் புரட்சி மேகங்களை மீண்டும் திசை திருப்ப வேண்டுமாயின் தன்போன்ற பிற்போக்கு சக்திகளின் உதவி இன்றைய நிலையில் அவசியமாகிறது. இவர்களைப் பாவித்தே அரசிற்கெதிரான புரட்சி மனோபாவத்தோடு கிளர்ந்தெழுபவர்களை திசை திருப்பவும் முடியும். அதாவது தான் செய்யவேண்டிய ஒடுக்குமுறைகளை தன்போன்ற பிற சக்திகளினூடாக செய்தல் இதனால் ஏற்படும் பின்விளைகளிலிருந்து தனக்கோ அன்றி தனது அரசிற்கோ எந்தவித களங்கமும் வராமல் கண்காணிக்க முடியும். இவ் அடிப்படையிலேயே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு குடியுரிமை வழங்கப்பட்டது.

இவருக்கு குடியுரிமை வழங்கியதன் மூலம் ஏற்கனவே இரண்டாக உடைந்துபோன சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அங்கமான விஜயகுமாரதுங்காவின் சிறிலங்கா மக்கள் கட்சியின் முற்போக்கு நடவடிக்கையை சீர்குலைக்க முடியும். மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா சமசமாஜக்கட்சி, போன்ற கட்சிகளுக்குள் சிறிமாவிற்கு சாதகமான போக்குள்ளவர்களை கட்சியிலிருந்து பிரித்தெடுத்து, அக்கட்சிகளைப் பலவீனமாக்க முடியும். (அதாவது சிறிமாவைப் பாவித்து முற்போக்கு சக்திகளை பலமிழக்கச் செய்வது) தேர்தல் ஒன்று வைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், முற்போக்கு சக்திகளுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் செய்வதே முக்கிய நோக்கமாகும். ஏனெனில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அதிகாரத்துக்கு வந்தாலும் தமிழருக்கு உரிமை கொடுக்கவோ, வடக்கு - கிழக்கை ஒன்றிணைக்கவோ ஆதரவளிக்க மாட்டார் என்பது ஜே. ஆருக்கு நன்கு தெரியும். ஏனெனில் இவரும் முதலாளித்துவ குணம்சம் உள்ளவரேயாவர். மாறாக தேர்தல் நடைபெறக்கூடிய ஓர் நிலையில் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுப்பேன் என்றோ அன்றி வடக்கு கிழக்கை ஒன்றிணைப்பேன் என்றோ கோரிக்கையை முன்வைத்து வெல்லமுடியாது என்பதையும் ஜே. ஆர். நன்கு அறிவார்.

மற்றும் வாக்குரிமை பறிக்கப்பட்டபின் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழ் மக்களுக்கு சாதகமாக பேசிவருவதையும், இதனால் சிறிமாவோ மீது தமிழ் மக்களின் கவனம் திரும்பியுள்ளதையும் அவதானிக்கமுடியும். இன்றைய நிலையில் தமிழீழப் பிரச்சினைக்கு இந்தியாவின் அனுசரணையோடு ஏதாவது தீர்வு காண முன்வந்தாலும், இதை சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பாவித்து செய்வதன் மூலம் சிங்கள பௌத்த குருமாரிடமிருந்தோ அன்றி சிங்கள மக்களிடமிருந்தோ வரும் எதிர்ப்பை சிறிமாவின் தலையில போட்டு, தான் தப்பித்துக் கொள்ளலாம். தொடர்ந்து மேற்கொள்ளவிருக்கும் பேச்சுவார்த்தையில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டாலும் இவற்றிற்கு காரணம் மற்றைய கட்சிகளின் தவறான தலையீடுகளே எனக் காரணம் காட்டி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு நிலை, மொத்தத்தில் பல பிற்போக்கு தலைமைகள் இன்றைய இலங்கை அரசியல் சூழ்நிலையில் பங்கெடுப்பதால் கூட்டுமொத்தமாக முழு முற்போக்கு சக்திகளையும் இணையவிடாது திசை திருப்பிக் கொண்டிருக்க முடியும். புரட்சிக் குணம்சங்களை மழுங்கடிக்க முடியும் என்பன போன்றவற்றைக் கருத்திற்கொண்டே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு காலக்கெடுவிற்கு ஒரு வருடத்திற்கு முன்பாகவே குடியுரிமை வழங்கியுள்ளார் என்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டும்.

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்ப்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகின்றது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்